இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 25-09-2025

# தர்மேந்திர பிரதானின் தடுமாற்றம்!

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், தமிழ்நாடு வந்து பல்வேறு உருட்டுகளையும் புரட்டுகளையும் செய்து விட்டுப் போயிருக்கிறார். அவர் சொன்னதை அவரே மறுக்கிறார்.

“ஒன்றைப் புரிந்து ஆராய்ந்து கற்க வேண்டுமானால் தாய் மொழிக் கல்வியே அவசியம்” என்கிறார் தர்மேந்திர பிரதான். அவர்தான் இந்தியைத் திணித்து இந்தியை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால் நிதி கிடையாது என்று அராஜகமாகச் சொல்பவர். ‘ஒன்றைப் புரிந்து ஆராய்ந்து கற்க வேண்டுமானால் தாய்மொழிக் கல்வியே அவசியம்’ என்று அவர் உண்மையான ஈடுபாட்டுடன் சொல்வாரேயானால், ‘அவரவர் அவரவர் தாய்மொழியை மட்டும் கற்றுக் கொள்ளுங்கள்’ என்று சொல்வாரா? இந்திக்கு பி.ஆர்.ஓ.வாக இருந்து இந்தி பேசாத மக்கள் வாழும் ஒவ்வொரு மாநிலத்துக்கும் சென்று ‘இந்தி வியாபாரம்’ செய்து வரும் அவர், தாய்மொழியைப் பற்றிப் பேசலாமா?

“தமிழக அரசு தனது அரசியல் நிலைப்பாட்டை மாணவர்களின் கல்வியின் மீது திணிக்கக் கூடாது. தமிழகத்தில் அரசு மும்மொழிக் கொள்கையை அரசியலாக்கிக் கொண்டிருக்கிறது. மும்மொழி கற்பதில் என்ன பிரச்சினை? ஒன்றிய அரசின் ஒப்பந்தத்தை ஏற்றால்தான் சமக்ர சிக்ஷா கல்வி நிதியை தர முடியும். மாணவர்களுடைய நலனைவிட உங்களின் அரசியலுக்கு முக்கியத்துவம் தராதீர்கள், நான் அனைத்து விதமான ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கிறேன்” என்று சொல்லி இருக்கிறார் பிரதான். இந்தியைத் திணிப்பது அவர்தான். தமிழ்நாடு அரசு எந்த மொழியையும் மாணவர் மீது திணிக்கவில்லை.

ஒன்றிய அரசின் ஒப்பந்தத்தை ஏற்றால்தான் கல்விக்கான நிதியைத் தர முடியும் என்று அடம்பிடிப்பவர் அவர்தான். இப்படி அடம்பிடிப்பவர் தான் சொல்கிறார், ‘நான் அனைத்து விதமான ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கிறேன்’ என்று. ‘நிதி தர மாட்டேன்’ என்பவரும் அவர்தான். ‘ஒத்துழைப்பு தருவேன்’ என்பவரும் அவர்தான். புரிந்துதான் பேசுகிறாரா? புரியாமல் பேசி, தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்புகிறாரா?

**“கல்வி நிதி பெறும் விவகாரத்தில் அரசியல் வேண்டாம்” என்கிறார் பிரதான். அரசியல் செய்வது யார்? அவர்தானே? ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கையையும், பள்ளிக் கல்வி நிதியையும் ஒன்றாக்கி, அதன் நிபந்தனையாக்கும் அரசியலைச் செய்வது யார்? தர்மேந்திர பிரதான் தானே?**

**“தமிழக அரசு தனது அரசியல் நிலைப்பாட்டை மாணவர்களின் கல்வியின் மீது திணிக்கக் கூடாது” என்று சொல்கிறார் பிரதான். ஒன்றிய அரசு தனது இந்தித் திணிப்புக் கொள்கையை தமிழ்நாட்டு மாணவர்கள் மீது திணிப்பது அரசியல் அல்லவா? அராஜகம் அல்லவா?**

**“இரு மொழிக் கொள்கை என்பதை அரசியல் நிலைப்பாடாக தி.மு.க. வைத்துள்ளது” என்கிறார் பிரதான். அரசியல் நிலைப்பாடாக அல்ல, தமிழ்நாட்டின் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் அது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் நிறைவேற்றி, நாடாளுமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சட்டம் அது. இது தி.மு.க.வின் நிலைப்பாடு மட்டுமல்ல; பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்து 58 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் சட்டம் அது. அந்தச் சட்டத்தைக் கேள்வி கேட்கும் உரிமை, தர்மேந்திர பிரதானுக்கு இருக்கிறதா?**

**“ஒன்றிய அரசு எந்த மொழியையும் திணிக்கவில்லை” என்கிறார் பிரதான். இந்திக்கு ஆதரவான செயல்களுக்கு என்ன பெயர்? திணிப்பு அல்லவா? வேறு ஏதாவது சமஸ்கிருதத்தில் பெயர் வைத்துள்ளீர்களா?**

**“மொழியின் அடிப்படையில் பிரிவினைகளை உருவாக்க முயன்றவர்கள் தோல்வி அடைந்து விட்டனர். சமூகம் அதையெல்லாம் தாண்டிச் சென்று விட்டது” என்கிறார் பிரதான். அதையேதான் நாங்களும் சொல்கிறோம். ‘மொழியின் அடிப்படையில் பிரிவினையை உருவாக்க முயல்பவர்கள் தோல்வியையே அடைவார்கள்’. இதனை இந்தித் திணிப்பாளர்கள் முதலில் புரிந்து கொண்டு திருந்த வேண்டும்.**

“நான் தமிழ் மொழியை கற்க விரும்புகிறேன்” என்று சொல்லி இருக்கிறார் பிரதான். இதையே தான் பத்து ஆண்டுகளாக உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்லி வருக்கிறார். ‘என்னால் தமிழில் பேச முடியவில்லை’ என்று பத்து ஆண்டுகளாகச் சொல்லி வருகிறார் அமித்ஷா. இவர்கள் தமிழில் பேசினாலும் என்ன பேசப் போகிறார்கள்? இந்தியை ஆதரித்துத் தான் பேசப் போகிறார்கள். அதை இந்தியிலேயே பேசட்டும். தமிழில் பேசவேண்டாம்!

தர்மேந்திர பிரதான் தனது உரையில் ஒரே ஒரு உண்மையைச் சொல்லி இருக்கிறார். **“நம் நாடு வரலாற்றுப் பெருமைகளை கொண்டது. ஆனால், வடக்குப் பகுதிகளில் தொடர் படையெடுப்புகளால், நாகரிகங்களை தக்க வைக்க முடியாமல் போனது. அதேநேரம், தென் மாநில மக்கள், தங்கள் நாகரிகத்தை இன்றளவும் பாதுகாத்து வருகின்றனர்”** என்று சொல்லி இருக்கிறார் பிரதான். ஆம் உண்மைதான். நாம் படையெடுப்புகளால் சேதமுறாமல் நம்மைக் காத்தோம். இன்றும் அதே படையெடுப்புகள் தொடரத் தான் செய்கின்றன. நம்மை நாம் காத்துக் கொள்கிறோம்!

**“தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அராஜகவாதிகள், ஜனநாயகப் பண்பு இல்லாதவர்கள்” என்று நாடாளுமன்றத்தில் கொக்கரித்தவர்தான் இந்த தர்மேந்திர பிரதான். பின்னர் மன்னிப்புக் கேட்டவர் இவர். ‘யாரோ ஒரு சூப்பர் சி.எம். பேச்சைக் கேட்டுக் கொண்டு பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் திட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடவில்லை’ என்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தை இந்திய நாடாளுமன்றத்தில் கொச்சைப்படுத்தி அசிங்க அரசியல் செய்தவர் தான் இவர் என்பதை மக்கள் மறந்துவிடவில்லை. தமிழ்நாட்டுக்கு வந்து பல்வேறு கட்டியம் கட்டி ஆடுகிறார் பிரதான்.**

**தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்!**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.09.2025) மதுரை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 9.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளியுடன் கூடிய வளைகோல் பந்து (ஹாக்கி) மைதானம் புதுப்பிக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

### ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ – நேரு உள்விளையாட்டு அரங்கில்

# தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சிக் கொண்டாட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – தெலுங்கானா முதல்வர் அ.ரேவந்த்ரெட்டி பங்கேற்கின்றனர்!

சென்னை, செப். 25-

**“கல்வியில் சிறந்த தமிழ்நாடு” தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம் 2025–26 கல்வியாண்டிற்கான ’புதுமைப்பெண்’ மற்றும் ’தமிழ்ப் புதல்வன்’ திட்டங்கள் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இன்று (25.9.2025) மாலை 4.00 மணியளவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் தெலங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்களும் தொடங்கி வைக்க உள்ளார்கள்.**

சமூகநீதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு அரசு, கல்வி அனைத்துத் தரப்பினருக்கும் சென்று சேரவேண்டும் என்கிற நோக்கத்தோடு அரசுப் பள்ளியில் பயின்று கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’ என்கிற திட்டத்தின்கீழும், மாணவர்களுக்கு ‘தமிழ்ப் புதல்வன்’ என்கிற திட்டத்தின்கீழும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறது.

2025-26 கல்வி ஆண்டிற்கான “புதுமைப்பெண் - தமிழ்ப் புதல்வன்” திட்டங்களின் தொடக்கவிழா இன்று (25.9.2025) மாலை 4.00 மணியளவில் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியை ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்னும் கருப்பொருளில் கொண்டாடும் இவ்விழாவில் தலைமையேற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் தெலங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்களும் திட்டங்களை தொடங்கி வைக்கின்றனர். இவ்விழாவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றார்.

தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டமாக இவ்விழா மாலை 4 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறவுள்ளது.

கல்வி சார்ந்த 5 முக்கிய திட்டங்களையும் சாதனைகளையும் முன்னிலையாக வைத்து இவ்விழா 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதல் பகுதியாக தமிழ்நாட்டு மக்களின் மனதுக்கு நெருக்கமானத் திட்டமான “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” இடம் பெறும். அதனைத் தொடர்ந்து “நான் முதல்வன்”, “விளையாட்டுச் சாதனையாளர்கள்”, “புதுமைப் பெண்-தமிழ்ப் புதல்வன்” மற்றும் “அரசுப் பள்ளிகளிலிருந்து முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் சென்ற சாதனையாளர்கள்” ஆகிய அரங்கங்கள் நடைபெறும்.

இவ்வரங்கங்களில் இத்திட்டங்களால் பயன்பெற்றவர்கள், இத்திட்டத்தின் மூலம் சாதித்தவர்கள், அவர்களுக்குத் துணை நின்றவர்கள், ஆசிரியர்கள், நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் அனுபவங்களையும் தங்கள் வாழ்வில் இத்திட்டங்களின் தாக்கத்தையும் பகிர்ந்து கொள்ள இருக்கின்றனர்.

இதன் பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தெலங்கானா முதலமைச்சர் அவர்களும் இணைந்து 2025-26-ஆம் ஆண்டிற்கான “புதுமைப்பெண்-தமிழ்ப் புதல்வன்” திட்டங்களைத் தொடங்கி வைப்பார்கள். இந்த ஆண்டு இத்திட்டத்தின் மூலம் 2.57 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.


அத்துடன் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்காற்றி வரும் சமூக சிந்தனையாளர்கள், சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்கள், பயிற்றுனர்கள், கல்வி அமைப்புகளின் நிர்வாகிகள் ஆகியோர் பாராட்டிச் சிறப்பிக்கப்பட உள்ளனர்.

இவ்விழாவில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள் ஆகியோர் மற்றும் மேயர், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பலர் பங்கேற்றுச் சிறப்பிக்க உள்ளார்கள்.

### சர்வதேசத் தரத்தில் சென்னை – அண்ணாசாலை உயர்மட்ட மேம்பாலத்துக்காக

# ஹைதராபாத்தில் தயாராகும் எஃகு கட்டமைப்புகளின் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!





தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான 3.20 கிலோமீட்டர் நீளத்தில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதையடுத்து, ஹைதராபாத்திலுள்ள குளோபல் தொழிற்சாலையில் தயாராகும் 3,400 டன் எடைகொண்ட முன்வார்க்கப்பட்ட கட்டமைப்புகளின் பற்றவைக்கும் (Welding) பணிகளை நேற்று (24.09.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சென்று ஆய்வு செய்தார்.

ஹைதராபாத், செப். 25-

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் விதமாக, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, 3.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.621கோடி மதிப்பீட்டில், உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் (23.9.2025) குஜராத் மாநிலம், வதோதராவில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (24.9.2025) ஆந்திரா மாநிலம், ஹைதராபாத் குளோபல் தொழிற்சாலையில், 3,400 டன் எடைகொண்ட முன்வார்க்கப்பட்ட கட்டமைப்புகளின் பற்றவைக்கும் (Welding) பணிகளை நேரில் ஆய்வு செய்து, இப்பணிகள் அனைத்தும் தரத்திற்கு ஏற்ப தயார் செய்யப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஆய்வு மேற்கொண்டார்.

**முன்வார்க்கப்பட்ட எஃகில் தயாரிப்பு!**

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, செய்தியாளர்கள் சந்திப்பின்போது,

மேம்பாலத் தூண்கள் (Pier), மேல்தாங்கிகள் (Pier-Cap), உத்திரங்கள் (Girder) போன்ற முக்கியமான கட்டமைப்புகள் அனைத்தும் முன்வார்க்கப்பட்ட (Pre-fabricated) எஃகில் தயாரிக்கப்படுகின்றன என்பதே இந்து கட்டுமானப் பணியின் தனிச் சிறப்பாகும்.


சுமார் 15,000 டன் எடையுள்ள இக்கட்டமைப்புகள் குஜராத் மாநிலம், வதோதரா, ஆந்திர மாநிலம், ஹைதராபாத் ஆகிய நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளில் விரைவாக உற்பத்தி செய்யப்பட்டு, பின்னர் சென்னைக்கு கொண்டு வரப்பட்டு நிறுவப்படுகின்றன.

**போக்குவரத்து நெரிசல் குறையும்!**

இந்த மேம்பாலப் பணிகள் நிறைவடைந்த வுடன், அண்ணாசாலைப் பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசல் குறையும், தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை இடையேயான பயண நேரம் கணிசமாக குறையும், பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வசதிகள் ஏற்படும், இம்மேம்பாலம் சர்வதேச தரத்திற்கு இணையான கட்டமைப்பு தரத்தில் அமையப்பெற்று, நீடித்த பயன்பாடு வழங்கும். மக்கள் நலன், பாதுகாப்பு, தரம் ஆகிய இம்மூன்றும் எப்போதும் எங்கள் முதன்மையான நோக்கம்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ் நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா. சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவண செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.



புதுச்சேரி மாநிலம் கதிர்காமம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை திறப்பு விழா, கலைஞர் நூலகம் திறப்பு விழா மற்றும் கதிர்காமம் தொகுதி தி.மு.க. அலுவலக திறப்பு விழா என முப்பெரும் விழா சண்முகாபுரம் காவல் நிலையம் அருகில் நடைபெற்றது. இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்துகொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து சிறப்பித்தார். உடன் மாநில அமைப்பாளர், இரா.சிவா எம்.எல்.ஏ., உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.